வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 2919/அ3/2024 நாள்: 16.12.2024
-----

பொருள்: பள்ளிக்கல்வி – சிறப்புக்கட்டணம் – வேலூர் மாவட்டம் – 2024 –2025ஆம் கல்வியாண்டு – அரசு/நகராட்சி/அரசு உதவி பெறும் (சுயநிதி பிரிவு தவிர்த்து) உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு சிறப்புக் கட்டணம் இழப்பீட்டுத் தொகை வழங்கியது – கூடுதல் தேவை இருப்பின் விவரம் சமர்ப்பிக்கக் கோருதல் – தொடர்பாக.

பார்வை:
1. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.040460/ஐ/இ1/2024, நாள். 25.09.2024.
2. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (நாட்டு நலப்பணி திட்டம்) அவர்களின் கடித ந.க.எண்.040460/ஐ/இ1/2024–1, நாள். 16.12.2024.

-----

பார்வை(1)இல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடிதத்தில், 2024–2025 ஆம் கல்வியாண்டில் அரசு/நகராட்சி/அரசு உதவி பெறும் உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்குத் (சுயநிதி பிரிவு தவிர்த்து) தேவைப்படும் சிறப்புக்கட்டண இழப்பீட்டுத் தொகை வழங்கி ஆணையிடப்பட்டது.

தற்போது பார்வை (2)இல் காணும் பள்ளிக் கல்வி இயக்கக இணை இயக்குநர் அவர்களின் கடிதத்திற்கிணங்க, மாணாக்கர்களின் சேர்க்கைக்கேற்ப கூடுதல் தேவை ஏதுமிருப்பின் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து 18.12.2024அன்று மாலை 04.00மணிக்குள் இவ்வலுவலக அ3 பிரிவில் சமர்ப்பிக்குமாறு அனைத்து அரசு/நகராட்சி/அரசு உதவி பெறும் உயர்/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – படிவம்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
தலைமையாசிரியர்கள்
அரசு/நகராட்சி/அரசு உதவி பெறும்
உயர்/மேல்நிலைப் பள்ளிகள்
வேலூர் மாவட்டம்.